3. தகவல் கோரல்

(அ) சென்னை, சாலையோர குடிசைவாசிகளுக்கு தரமான வீடுகள் கட்டித் தருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை ஓரங்களில் வசிக்கின்ற மக்களுக்கு மாற்று இடம் தருவதற்குண்டான கவன ஈர்ப்பு. இதே அவையில் இதுகுறித்து, 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் அப்போது வீட்டு வசதித் துறை அமைச்சராக இருந்தவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். உடனடியாக அந்த வீடுகள் கட்டித் தரப்படும் என்றார். அதன் பிறகு, அந்தத் துறைக்கு பொறுப்பேற்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடம் 2018, 2019 ஆகிய இரு ஆண்டுகளிலும் கோரிக்கை வைத்தேன். அவரும் 'பட்டியலைத் தாருங்கள், உடனடியாக நான் வீடுகளை ஒதுக்குகிறேன்' என்றார். எங்கெங்கெல்லாம் சாலைகளில் குடியிருக்கின்றார்களோ அவர்களுடைய பட்டியலையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் அளித்தேன். தாங்களும் அதை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி, அமைச்சர் அவர்களும் 'உடனடியாகப் பரிசீலிக்கப்படும்' என்றார். மூன்று ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.*

இதில் நான் சொல்ல வருவதென்னவென்றால், PMAY *திட்டத்தின்படி, தற்போது சென்னையில் 4,000 வீடுகளுக்கும் அதிகமாக கட்டிக் கொண்டிருக்கிறீர்கள். அந்த வீடுகளில் சாலையோரம் குடியிருப்பவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கிறேன். மனிதாபிமானத்தோடு இந்தப் பிரச்சினையை அணுகி, ** வளர்ந்துவிட்ட இந்தச் சமூகத்தில் சுதந்திரம் பெற்று இத்தனை ஆண்டுகள் ஆகியும்கூட ** இதயத்தோடு அந்த மக்களுக்கு வீடுகளை ஒதுக்கித் தர வேண்டுமென்று தங்களின் வாயிலாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2019 ஜூலை 9]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அருமை நண்பர் திரு. சேகர்பாபு அவர்கள், எப்பொழுதும் slow motion–ல் ஆரம்பித்து high peak–ல் பேசுவார். அதேமாதிரி இந்தப் பிரச்சினை குறித்தும், அவர் அதனுடைய முக்கியத்துவத்தை மிகவும் அழுத்தமாக இங்கே கூறியிருக்கின்றார்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொலைநோக்கு திட்டம் 2023 என்ற ஆவணத்தை 2012 ஆம் ஆண்டு நாட்டு மக்களுக்கு பிரகடனப்படுத்தி, குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற 15 இலட்சம் ஏழையெளிய மக்களுக்கு உறுதியான, தரமான வீடுகள் கட்டித் தரப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி நல்ல பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கிட்டத்தட்ட 15 இலட்சம் ஏழையெளிய மக்கள் குடிசைப் பகுதியில் வாழ்கின்றார்கள் என்று கணக்கிடப்பட்டது. அவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு 75,000 கோடி ரூபாய் திட்ட ஒதுக்கீடு வேண்டுமென்று கணக்கிடப்பட்டது. அதற்கு பல்வேறு நிதி ஆதாரங்களைத் திரட்டி, முழுமையாக தமிழகத்தில் குடிசைப் பகுதிகளற்ற நகரங்களையும், குடிசைப் பகுதிகளற்ற கிராமங்களையும் உருவாக்குவது மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனவுத் திட்டம். அந்தத் திட்டத்தின்படி, இன்றைக்கு படிப்படியாகக் குடிசைகள் கணக்கெடுக்கப்பட்டு, அவர்களுக்கு உறுதியான, தரமான வீடுகள் 400 சதுர அடி நிலப்பரப்பில் அடுக்குமாடி வீடுகளாகக் கட்டித் தருகின்ற பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதுவரை கிட்டத்தட்ட 6,00,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, ஏழையெளிய மக்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதனை இந்த மாமன்றத்திற்கு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் சாலையோரங்களில் மக்கள் வசிப்பதாகவும், அது அவரது சட்டமன்றத் தொகுதிக்குள் இருப்பதாகவும், அவர்களுக்கு தரமான வீடுகள் கட்டித் தரப்பட வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே வலியுறுத்திக் கூறியிருக்கின்றார்கள். அந்தப் பகுதியில் சாலையோரங்களில் வசிக்கின்ற மக்களுடைய குடியிருப்புச் சான்றிதழ் சென்னை மாநகராட்சியிடமிருந்து பெறப்பட்டு, அவர்கள் அந்தப் பகுதியில்தான் வசிக்கின்றார்களா என்பது

உறுதி செய்யப்பட்டவுடன், அந்தப் பகுதி ஏழை, எளிய மக்களுக்கு படிப்படியாக தரமான, உறுதியான வீடுகள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(ஆ) எழும்பூர் தொகுதி, மறுகட்டுமானம் செய்யப்பட்ட குடிசைப் பகுதி மாற்று வாரிய குடியிருப்புகளை பயனாளிகளுக்கு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.*

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 77—வது வட்டத்தில் சுமார் 1,536 வீடுகள் கட்டும் திட்டம் நிறைவேற்றப்பட்டு, அவற்றில் 672 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மீதமிருக்கின்ற 864 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, பயனாளிகளிடம் இன்னும் ஒப்படைக்கப்படவில்லை. அதுகுறித்து விசாரித்தபோது, அவற்றுக்கு இன்னும் கழிவுநீர் இணைப்பும், குடிநீர் இணைப்பும் கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். ஏறத்தாழ 300—க்கும் மேற்பட்ட ஏழை மக்கள், அந்தக் கட்டடப் பணிகள் நடைபெற்றுவருகின்ற இடத்திற்கு அருகில் இருக்கின்ற மணற்பாங்கான இடங்களில் தகரத்தினால் வேயப்பட்ட கூரை வீடுகளை அமைத்து, குடியிருந்து வருகிறார்கள். மழைக் காலத்திற்கு முன்பே அந்த மக்களுக்கு அந்த வீடுகளை ஒதுக்கித் தர வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

அதேபோல 77—வது வட்டத்திலுள்ள பி.கே. காலனியில் 1, 3, 9 ஆம் பிளாக்குகளில் உள்ள வீடுகள் பைசா நகரத்து சாய்ந்த கோபுரத்தைப்போல சாய்ந்த நிலையில் உள்ளன. மழைக் காலத்தில் ஏதாவது அசம்பாவிதம் நிகழ்வதற்கு முன்பாக தாங்கள் அந்த இடத்தை ஆய்வு செய்து, அவற்றுக்குப் பதிலாக புதிய கட்டடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற நிதியாண்டிலும் இதே கோரிக்கையை வலியுறுத்தினேன். அதிகாரிகள் அந்த இடத்தை வந்து பார்த்துவிட்டுச் சென்றார்கள். சென்றவர்கள் சென்றவர்கள்தான். இதுவரை அந்தப் பணிகள் எந்த நிலையில் இருக்கின்றன என்பது தெரியவில்லை.

அதேபோல, எழும்பூர் தொகுதி, 104—வது வட்டத்தில் ஆர்.கே. புரம், 61—வது வட்டத்தில் சந்தோஷ் நகர் ஆகிய இரண்டு